# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க,

# சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகச் சட்டம்

---

[1981, நவம்பர் மாதம் 3 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1981, நவம்பர் மாதம் 06 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப் பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.10 தபாற் செலவு : சதம் 75

*1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகச் சட்டம்*

*[1981, நவம்பர் மாதம் 3 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச. வ.—ஓ. $\frac{33/79}{1321}$

**சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், கந்தவளை தோட்டத்தையும், அதன் மீதுள்ள அசைவுள்ள ஆதனத்தையும் கலைக்கழகத்திற்கு உரித்தாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*சேர் ஜோன் லயனல் கொத்தலாவலை சி. எச். , கே. பி. ஈ., எல். எல். டி. அவர்களுக்குச் சொந்தமாகவும், அவரது உடைமையிலும் இருந்ததும், கந்தவளை தோட்டம் என அறியப்படுவதும், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்படுவதுமான காணியையும் வளவுகளையும் 1979 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆம் தேதியிடப்பட்டதும் 1292 ஆம் இலக்கத்தைக் கொண்டதும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சிறீ ராகவன் நாராயணசாமியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான உறுதிமூலம் சொல்லப்பட்ட சேர் ஜோன் லயனல் கொத்தலாவலை அவர்கள் இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசிற்குப் பூரணமானதும் கைமீட்கப்படமுடியாததுமான கொடையாகவும் கொடைவழியாகவும் கைமாற்றம் செய்துள்ளார் ஆதலாலும் :*

*அத்துடன் 1980 ஆம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 7 ஆம் தேதிய 1389 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சிறீ ராகவன் நாராயணசாமியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான உறுதியின் மூலம், சொல்லப்பட்ட சேர் ஜோன் லயனல் கொத்தலாவலை சி. எச்., கே. பி. ஈ., எல். எல். டி., அவர்கள், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட அசைவுள்ள ஆதனங்கள் யாவற்றையும் முழுமையானதும் கைமீட்கப்பட முடியாததுமான கொடையாகவும், கொடைவழியாகவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்குக் கைமாற்றம் செய்துள்ளார் ஆதலாலும் :*

*அத்துடன் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும், அசைவுள்ள ஆதனங்களும் அலுவலர் பதவியணிக்குமுன் பயிற்சியளிப்பதற்கென ஒரு தேசியப் பாதுகாப்புக் கலைக்கழகத்தினைத் தாபிக்கும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதே காலஞ்சென்ற சேர் ஜோன் லயனல் கொத்தலாவலை சீ. எச்., கே. பி. ஈ., எல். எல். டி. அவர்களின் விழைவும் விருப்பமுமாகும் ஆதலாலும் :*

2—சீ 58283–6,650 (81/09)

ஆகவே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலே பாதுகாப்புக் கலேக்கழகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

## சேர் ஜோன் கொத்தலாவலே பாதுகாப்புக் கலேக்கழகம்

சேர் ஜோன் கொத்தலாவலே பாதுகாப்புக் கலேக்கழகத்தைத் தாபித்தல்.

**2.** (1) "சேர் ஜோன் கொத்தலாவலே பாதுகாப்புக் கலேக்கழகம்" என அழைக்கப்படுவதான கலேக்கழகம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும் ; இது இதனகத்துப்பின்னர் " கலேக்கழகம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(2) கலேக்கழகமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித் தொதுக்கப்பட்ட பெயர்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், இடையறு வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டதாதலும் வேண்டும். அத்துடன் அது அத்தகைய பெயர்கொண்டு வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

கலேக்கழகத்தின் குறிக்கோள்கள்.

**3.** கலேக்கழகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) அலுவலர் பதவியணிமுன் பயிற்சிக்கு இயைபானவையாகக் கூடிய அத்தகைய பாடங்களில் கலேக்கழகக் கற்கைகளுக்கான வசதிகளை ஏற்பாடு செய்தலும் அத்தகைய கற்கைகள் பற்றிய போதனைகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஆ) முன் அலுவலர் பதவியணிகளுக்கு ஓர் அடிப்படையான சேவைப் பயிற்சியை ஏற்பாடுசெய்தல் ;

(இ) முன் அலுவலர் பதவியணிகளுக்கிடையே, அவர்தம் பண்பையும், தன்னம்பிக்கையையும், தலைமைத் தன்மைகளையும் விருத்திசெய்யும் நோக்கங்களுக்காகத் தோழமையுணர்ச்சியையும், நல்லெண்ண உணர்ச்சியையும் வளர்த்தலும் அவர்களுக்கிடையே ஒத்துணர்வை மேம்படுத்தலும் ; அத்துடன்

(ஈ) கலேக்கழகம் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையெனக் கருதுகின்றனவான அத்தகைய பிற பணிகளைப் புரிதல்.

கலைக்கழகத்தின் தத்துவங்களும், கடமைகளும் பணிகளும்

4. கலைக்கழகமானது அதன் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்காகப் பின்வரும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம் :—

(அ) உள்ளூர் வளங்களிலிருந்தோ அல்லது அந்நிய வளங்களிலிருந்தோ மானியக் கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுதல் ;

(ஆ) இச் சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்படும் அல்லது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையுதிர்ப்பு மூலமாக அல்லது வேறு வகையாக அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறுதல் அல்லது வைத்திருத்தல் ; அத்துடன் அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்குக் கொடுத்தல், மானியக் கொடையாகக் கொடுத்தல், உரித்துமாற்றல் மரணசாதன மூலம் கையளித்தல், சாட்டுதல், பரிமாற்றம் செய்தல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(இ) கலைக்கழகத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது எவரேனும் அலுவலர் மூலமாகவோ அல்லது அதற்கெனக் கலைக்கழகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் மூலமாகவோ, செய்துகொள்ளுதலும், நிறைவேற்றுதலும் ;

(ஈ) கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காக, முகாமைச் சபை தகுந்ததெனக் கருதுகின்றவாறான அத்தகைய வகையிலும், அத்தகைய பிணைப் பொறுப்பின்மேலும் பணம் கடன் பெறுதல் அல்லது பணம் திரட்டுதல் ;

(உ) கலைக்கழகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஊழியர்களையும் முகவர்களையும் நியமித்தல் ;

(ஊ) முகாமைச் சபை தகுந்ததெனக் கருதுகின்றவாறான அத்தகைய வகையில் அதன் நிதிகளை முதலீடு செய்தல் ; அத்துடன்

(எ) அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையான, உகந்தவையான, அல்லது இடைநேர் விளைவானவையான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்தல்.

கலைக்கழக முகாமைச்சபையின் அமைப்பு.

5. கலைக்கழக அலுவல்களின் முகாமையும் நிருவாகமும் முகாமைச் சபையொன்றுக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் " சபை " எனக் குறிப்பீடு செய்யப்படும்) அச்சபை சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ; இவரே தவிசாளராதல் வேண்டும் ;

(ஆ) இலங்கை ஆயுதந்தாங்கிய படையினரின் ஏவுநர்கள் ;

(இ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்றவரும் பொதுத் திறைசேரியைச் சேர்ந்தவருமான அலுவலரொருவர் ;

(ஈ) கலைக்கழகத்தின் ஏவுநராக அப்போதைக்கு பதவி வகிக்கின்ற ஆள் ; அத்துடன்

(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படுகின்றவரும், அந்த ஆணைக் குழுவைச் சேர்ந்தவருமான உறுப்பினரொருவர்.

ஏவுநர்.

6. (1) சனாதிபதியானவர் ஆயுதந்தாங்கிய படைச் சேவைகளின் சிரேட்ட அலுவலரொருவரைக் கலைக்கழகத்தின் ஏவுநராக (இதனகத்துப் பின்னர் "ஏவுநர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நியமித்தல் வேண்டும். அவரே பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன் ; அவர் இறப்பினால், பதவி துறப்பதினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலினால் தமது பதவியை முன்னமே வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) கலைக்கழகம் தாபிக்கப்பட்ட தேதியின்மேல் ஏவுநராக நியமிக்கப்படுபவர் இலங்கைத் தரைப்படையின் சிரேட்ட அலுவலராக இருத்தல் வேண்டும். அந்த ஏவுநரின் பதவிக்காலம் முடிவுற்றதன்மேல் ஏவுநராக நியமிக்கப்படுபவர் இலங்கைக் கடற்படையின் சிரேட்ட அலுவலராக இருத்தல்வேண்டும். அந்த இரண்டாவதாகக் கூறப்பட்ட ஏவுநரின் பதவிக்காலம் முடிவுற்றதன்மேல் ஏவுநராக நியமிக்கப்படுபவர் இலங்கை வான்படையில் சிரேட்ட அலுவலரொருவராக இருத்தல் வேண்டும் ; அதன் பின்னர் ஏவுநர் பதவிக்கான நியமனமானது இதனகத்துத் தரப்பட்டுள்ள ஒழுங்குவரிசைக்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஏவுநர் அதற்கெனச் சனாதிபதிக்கு விலாசமிட்டுச் செய்யப்படும் எழுத்திலான கடிதத் தொடர்பு மூலம் தமது ஏவுநர் பதவியைத் துறக்கலாம்.

(4) சனாதிபதியானவர், அவ்வாறு செய்தல் உசிதமானதெனக் கருதினால், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அகற்றுவதற்கான காரணம் எதையும் குறிப்பிடாமலேயே எவுநரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) எந்த எவுநர் தொடர்பாக (4) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்று ஆக்கப்பட்டதோ அந்த எவுநர், கசெற்றில் அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தேதியன்று தமது பதவியினை வறிதாக்குதல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின் கீழ் ஏதேனுமோர் ஆயுதந்தாங்கிய படைச் சேவையிலிருந்து நியமிக்கப்பட்ட எவுநரொருவர் —

(அ) எவுநராகப் பதவி வகிக்கின்ற அவரது காலப்பகுதி முடிவுறுமுன்பே, அவர் எந்த ஆயுதந் தாங்கிய படைச் சேவையைச் சேர்ந்தவரோ அந்த ஆயுதந்தாங்கிய படைச் சேவையிலுள்ள அவரது பதவியை வறிதாக்குகின்றவிடத்து அல்லது அந்தச் சேவையின் உறுப்பினராக இல்லாதொழிகின்றவிடத்து, சனாதிபதியானவர், அந்த ஆயுதந் தாங்கிய படைச் சேவையின் சிரேட்ட அலுவலரொருவரை எவுநராக நியமித்தல் வேண்டும் என்பதுடன், அந்த எவுநர் முன்னதாகவே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, தாம் எந்த எவுநரை அடுத்துப் பதவிக்கு வந்தாரோ அந்த எவுநரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும்வேண்டும் ; அல்லது

(ஆ) உடனலமின்மை காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாகத் தமது பதவிக்குரிய பணிகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராகவிருக்குமிடத்து, அவருக்குப் பதிலாக எவுநராகச் செயலாற்றுவதற்கென, சனாதிபதி, அந்த ஆயுதந்தாங்கிய படைச் சேவையின் சிரேட்ட அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, " ஆயுதந் தாங்கிய படைச் சேவைகளின் சிரேட்ட அலுவலர் " என்ற சொல்லமைப்பு —

(அ) இலங்கைத் தரைப்படையின் விடயத்தில் ஏனாதி பதவி வரிசைக்குக் குறையாத வரிசையிலுள்ள அலுவலரொருவர் எனவும் ;

(ஆ) இலங்கைக் கடற்படையின் விடயத்தில் வியவன் பதவி வரிசைக்குக் குறையாத வரிசையிலுள்ள அலுவலரொருவர் எனவும் ; அத்துடன்

(இ) இலங்கை வான்படையின் விடயத்தில் தொகுதி வியவன் பதவி வரிசைக்குக் குறையாத வரிசையிலுள்ள அலுவலரொருவர் எனவும்,

பொருளாகும்.

ஏவுநரின் கடமைகள்.

7. (1) ஏவுநர், சபையின் பொதுவான பணிப்புகளுக்கும், கட்டுப்பாட்டிற்கும் அமைவாக, கலைக்கழக அலுவல்களை நெறிப்படுத்துவதற்கும், கலைக்கழகத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் நிறைவேற்றுவதற்கும், கலைக்கழகத்தின் ஊழியர்களினதும், முன் படையயில் அலுவலர்களினதும் நிருவாகக் கட்டுப்பாட்டிற்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(2) ஏவுநர், சபையின் அங்கீகாரத்துடன் காலத்துக்குக் காலம் அவசியமானவையெனக் கருதுகின்றவாறான அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் கலைக்கழகத்தின் ஊழியர் எவருக்கும் எழுத்தில் கையளிக்கலாம் என்பதுடன், எந்த ஊழியருக்கு அத்தகைய தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் அவ்வாறு கையளிக்கப்பட்டனவோ அந்த ஊழியர் எவரும், ஏவுநரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைவாக அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும் வேண்டும்.

கலைக்கழகத்தின் நிதியம்.

8. (1) "கொத்தலாவல பாதுகாப்புக் கலைக்கழக நிதியம்" என அழைக்கப்படும் நிதியம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; இது இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(2) சபை அந்த நிதியத்தை முகாமைசெய்யவும், கட்டுப்படுத்தவும், செயற்படுத்தவும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

நிதியத்துக்குச் செய்யப்படும் கொடுப்பனவுகள்.

9. பின்வருவன நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) கலைக்கழகத்தின் பயன்பாட்டிற்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்திற்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும் ;

(ஆ) இலங்கையிலாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியிலிருந்தாயினுஞ்சரி எத்தன்மைத்தான எம்மூலத்திலிருந்தும் நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக் கொடைகள் என்ற வகையாகப் பெறப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும் ; அத்துடன்

(இ) கலைக்கழகம் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கையில், புரிகையில், நிறைவேற்றுகையில் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்,

நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியத்திலிருந்து செய்யப்படும் கொடுப்பனவுகள்.

**10.** பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) கலைக்கழகத்தைத் தாபிப்பதற்கும், செயற்படுத்துவதற்கும், அதனைப் பராமரிப்பதற்கும் அவசியமான செலவினங்கள் ;

(ஆ) அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் வேறு ஊழியர்களுக்கும் செய்யப்படும் சம்பளக் கொடுப்பனவு ;

(இ) கலைக்கழகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமானவை எனச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறான அத்தகைய வேறு கொடுப்பனவுகள் யாவும்,

அந்த நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

சபையின் கூட்டங்கள்.

**11.** இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கு அமைவாகச் சபையானது, சபைக் கூட்டங்கள் தொடர்பாகவும், அத்தகைய கூட்டங்களின்போது அலுவல்களைக் கையாளுதல் தொடர்பாகவும் அதன் நடவடிக்கை முறையினை ஒழுங்குபடுத்தலாம்.

உறுப்பினர்களிடையேயுள்ள வெற்றிடம் சபையின் நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றதாக்குதலாகாது.

**12.** சபையின் உறுப்பினரிடையே வெற்றிடமொன்று உளது என்ற காரணத்திற்காக மாத்திரம், அல்லது அதன் உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உளது என்ற காரணத்திற்காக மாத்திரம் சபையின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

கலைக்கழக அலுவலர், சேவையாளர் என்போரின் நியமனம்.

**13.** (1) சபையானது கலைக்கழகத்தின் நோக்கங்களுக்கு அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும், அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர்கள் அத்தகைய சேவை நிபந்தனைகட்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் அமைந்தவர்களாதலும் வேண்டும்.

(3) சபையின் வேண்டுதலின்பேரில், எவரேனும் பகிரங்க அலுவலர், அந்த அலுவலரினதும், அரசாங்க நிருவாகம் என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதுபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு கலைக்கழகப் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் ; அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) எவரேனும் பகிரங்க அலுவலர் கலைக்கழகப் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அந்த அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) எவரேனும் பகிரங்க அலுவலர் கலைக்கழகப் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச்சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அந்த அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவைசெய்ய உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை, சபையானது தொழிலிலமர்த்துகின்றவிடத்து, அந்த ஆளினால் கலைக்கழகத்துக்கு ஆற்றப்பட்ட சேவைக்காலப்பகுதியெதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்துக்கு ஆற்றிய சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) சபையின் வேண்டுதலின்பேரில், உள்ளூராட்சிச் சேவையைச் சேர்ந்த எவரேனும் உறுப்பினர், அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் வேறு எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடன், உள்ளூராட்சிச் சேவை மதியுரைச் சபையினது அல்லது அந்த உள்ளூர் அதிகாரசபையினது சம்மதத்துடனும், அதுபோன்ற சம்மதத்துடனும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, விடயத்துக்கேற்றவாறு தற்காலிகமாக நியமிக்கப்படலாம்; அல்லது சபையாலும், உள்ளூராட்சிச் சேவை மதியுரைச் சபையாலும் அல்லது உள்ளூரதிகார சபையாலும் உடன்படக்கூடியவாறான ஓய்வூதிய உரிமைகள் அல்லது சகாயநிதி உரிமைகள் தொடர்பிலான நியதி, நிபந்தனைகள் உள்ளிட்ட அத்தகைய நியதி, நிபந்தனைகளின் மேல் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) ஏழாம் உட்பிரிவினைப் பின்பற்றி, கலைக்கழகப் பணியாட்டொகுதிக்கு எவரேனும் ஆள் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினர் எந்த ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராகவிருக்கின்றாரோ அதேபோன்ற ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

சத்தியம் அல்லது உறுதியுரை.

14. முன் படையில் அலுவலர் ஒவ்வொருவரும் தமது பயிற்சியைத் தொடங்குமுன்பு விதித்துரைக்கப்பட்ட சத்தியத்தைச் செய்து கையொப்பமிடுதல் வேண்டும், அல்லது விதித்துரைக்கப்பட்ட உறுதியுரையை மொழிந்து கையொப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் II

### பொது

15. (1) விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் அல்லது ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எது தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) கலைக்கழக அலுவல்களின் முகாமையும் நிருவாகமும்;

(ஆ) கலைக்கழகத்திற்கு முன் படையில் அலுவலரைச் சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைமுறை;

(இ) முன் படையில் அலுவலருக்கான சேவை நியதி, நிபந்தனைகளும், அவர்களின் பயிற்சிக் காலத்தின்போது அவர்களுக்குச் செலுத்தற்பாலனவான படிகளும் ;

(ஈ) முன் படையில் அலுவலரின் நடத்தையும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் ;

(உ) முன் படையில் அலுவலர்களுக்கான இடவசதிக்கும், பங்கீடுகளுக்குமான ஏற்பாடு; அத்துடன்

(ஊ) கலைக்கழகத்திற்கு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கான நடவடிக்கைமுறை.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியொவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதனகத்துக் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர், வசதியானளவு விரைவில் அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதியேதுவும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் அதன்முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியெதுவும் எந்தத் தேதியன்று நீக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

கலைக்கழக உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளரும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படல் வேண்டும் என்பது.

16. கலைக்கழகத்தினைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளரும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

கலைக்கழகமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பது.

17. கலைக்கழகமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப் படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற் கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் அல்லது கலைக்கழகத்தின் பணிப்பின் மேல் எடுக்கப்படும் வழக்குக்கான பாதுகாப்பு.

18. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப் படும் ஏதேனும் செயலுக்காக அல்லது செய்யப் பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக் காக கலைக்கழகத்திற்கு எதிராக, அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது கலைக்கழகத்தின் பணிப்பின் மேல் கலைக்கழகத்தின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப் படும் ஏதேனும் செயலுக்காக அல்லது செய்யப் பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக் காக அத்தகைய எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக,

துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அமைதலாகாது.

(2) கலைக்கழகத்தினால் அல்லது கலைக்கழகத்திற்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் கலைக்கழகத்தினால் உறப்பட்ட செலவினங்கள் எவையும் நிதியத்திலிருந்தே செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதிலும், கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்ட செலவுத் தொகைகள் அல்லது அதனால் அறவிடப்பட்ட செலவுத் தொகைகள் எவையும் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறுன அத்தகைய ஆளெவரினுலும் இச்சட்டத்தின் கீழ் அல்லது கலைக்கழகத்தின் பணிப்பின்மேல் நல்லெண்ணத் துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனுமொரு நீதிமன்றத்தின் முன் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட செலவினம் எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளித்தால், அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய செலவினம் அவரால் அறவிடப்பட்டாலன்றி, நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**விதிகளை ஆக்குவ தற்கு எவுநருக் குள்ள தத்துவம்.**

**19.** சபையின் அங்கீகாரத்துடன், எவுநர் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் ஏதேனுமொன்று தொடர்பில் விதிகளை ஆக்கலாம் :—

(அ) முன் படையயில் அலுவலருக்குக் கலைக்கழகத்திஞல் அளிக்கப்படவேண்டிய கற்கைநெறிகள் ;

(ஆ) முன் படையயில் அலுவலருக்குக் கலைக்கழகத்திஞல் அளிக்கப்படவேண்டிய சேவைப் பயிற்சி ;

(இ) முன் படையயில் அலுவலருக்குக் கலைக்கழகத்திஞல் அளிக்கப்படவேண்டிய, மருத்துவ, நலன்புரி, பொழுது போக்கு வசதிகள் ; அத்துடன்

(ஈ) கலைக்கழகத்தின் ஏமத்திற்கும் பாதுகாப்பிற்கும் அவசிய மான நடவடிக்கைகள்.

## பாகம் III

## அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை உரித்தாக்கல்

**உரித்தாக்கற் கட்டளை.**

**20.** (1) 1979 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆம் தேதி யிடப்பட்டதும், 1292 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான உறுதி மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு நன்கொடை யாக அளிக்கப்பட்டதும், இதற்கான அட்டவணையில் விவரிக்கப் பட்டதுமான காணி, வளவுகள் யாவற்றையும், அத்துடன் 1980 ஆம் ஆண்டு எப்பிரில் மாதம் 7 ஆம் தேதியிடப்பட்டதும் 1389 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான உறுதிமூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு நன்கொடையாக அளிக்கப் பட்டதும் அதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்டதுமான அசை வுள்ள ஆதனங்கள் யாவற்றையும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் (இதனகத்துப் பின்னர் “ உரித்தாக்கற் கட்டளை ” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உரித்தாக்கற் கட்டளையிற் குறித் துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய தேதியிலிருந்து (இதன கத்துப் பின்னர் “ உரித்தாக்கல் தேதி ” எனக் குறிப்பீடுசெய்யப் படும்) அமைச்சர் கலைக்கழகத்திற்கு உரித்தாக்குதல் வேண்டும்.

(2) உரித்தாக்கற் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, கலைக்கழகமானது, உரித்தாக்கற்றேதியிலிருந்து பாரபந்தங்கள் யாவுமின்றி, அவ்வாறு உரித்தாக்கப்பட்ட அசைவுள்ள ஆதனம் யாவற்றுடனும் கூடிய எல்லாக் காணி வளவிலும் முழு உரித்தையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உரித்தாக்கலானது எல்லா ஆட்களுக்கும் எதிராக அவர்கள் அத்தகைய காணியிலும் வளவுகளிலும் எத்தன்மையதான உரிமையை, உரித்தை அல்லது அக்கறையைக் கொண்டிருப்பினுஞ்சரி அல்லது கொண்டிருப்பதாக உரிமைகோரினுஞ்சரி எல்லா நோக்கங்களுக்காகவும், இறுதியானதும் முடிவானதுமாக இருத்தலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட உரித்தாக்கற் கட்டளையொன்று கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் இயன்றளவு விரைவாகப் பாராளுமன்றத்தில் பட்டியற்படுத்தப்படவேண்டும்.

*முடிவுறுதுள்ள சட்ட நடவடிக்கைகள்.*

21. இச்சட்டத்தினால் கலைக்கழகத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனம் தொடர்பில் ஏதேனும் துடர்ச்சி, மேன்முறையீடு அல்லது வேறு சட்ட நடவடிக்கைகள் உரித்தாக்கற் தேதியில் முடிவுறுதிருக்குமிடத்து, அத்தகைய துடர்ச்சி, மேன்முறையீடு அல்லது வேறு சட்ட நடவடிக்கைகள் தணிந்துபோதலாகாது என்பதுடன், அதற்கிணங்க கலைக்கழகத்தினால் அல்லது கலைக்கழகத்திற்கெதிராகத் தொடர்ந்து நடாத்தப்படுதலும் வேண்டும்.

*ஏதேனும் ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் கீழான உரிமைகளும் பொறுப்புக்களும்.*

22. இருபதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரித்தாக்கற் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, அவ்வாறு உரித்தாக்கப்பட்ட காணி, வளவுகள் தொடர்பிலானவையும், உரித்தாக்கற் தேதியன்று உளதானவையுமான ஏதேனும் ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் கீழான எல்லா உரிமைகளும், பொறுப்புக்களும் கலைக்கழகத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

*உரித்தாககற் கட்டளையானது, ஏதேனும் கனிப்பொருளுக்கான உரிமையை அளித்தல் ஆகாது என்பது.*

23. இருபதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட உரித்தாக்கற் கட்டளையொன்று, அவ்வாறு உரித்தாக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் காணியிலுள்ள, காணியின்கீழுள்ள அல்லது காணியின் மீதுள்ள ஏதேனும் கனிப்பொருளுக்கான எந்த உரிமையையும் அளிப்பதாகக் கருதப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய கனிப்பொருளொவ்வொன்றும் குடியரசின் பூரண ஆதனமாக இருக்கின்றதாகக் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு இருத்தலும் வேண்டும்.

24. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு யூலை 11 ஆம் தேதிய 1292 ஆம் இலக்க உறுதியிலும் 1980 ஆம் ஆண்டு எப்பிரல் மாதம் 7 ஆம் தேதிய 1389 ஆம் இலக்க உறுதியிலும் உள்ள " கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம், கொத்தலாவலைபுரம் " என்பது பற்றிய குறிப்பீடு எதுவும், இச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட " சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம், கொத்தலாவலைபுரம் " பற்றிய குறிப்பீடொன்றாகக் கருத்தப்படுதல் வேண்டும். " கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம், கொத்தலாவலை புரம் " என்னும் குறிப்பீடு " சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக் கழகம், கொத்தலாவலை புரம் " பற்றிய குறிப்பீடு ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

25. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய— பொருள்கோடல்.

" இலங்கையின் ஆயுதந்தாங்கிய படை " என்பது —

(அ) இலங்கைத் தரைப்படை ; அல்லது

(ஆ) இலங்கைக் கடற்படை ; அல்லது

(இ) இலங்கை வான்படை

எனப் பொருளாகும்.

## அட்டவணை

1. மேற்கு மாகாணம் கொழும்பு மாவட்டத்தில் கல்பிற்றி கோறளையின் பள்ளே பற்றுவில் இரத்மலானை தெற்கில், தெகிவளை–கல்கிசை மாநகரசபை எல்லைக்குள் அமைந்திருப்பதும் கந்தவளை தோட்டம் என அழைக்கப்படுவதும், அறியப்படுவது மான 1956 ஆம் ஆண்டு ஓகத்து 23 ஆம் தேதியிடப்பட்டதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் திரு. இராசேந்திராவினல் தயாரிக்கப்பட்டதுமான 955 ஆம் இலக்க வரைபடத்தில் காணியின் இலக்கம் 12 ஐக் கொண்ட துண்டத்தின் வரையறுக்கப்பட்ட பாகமாகவுள்ளதும், துண்டம் " அ " (குளம்) எனக் குறியிடப்பட்டதுமான எல்லாக் காணித் துண்டும் ; அந்தச் சொல்லப்பட்ட துண்டம் " அ " என்பது 1978 திசெம்பர் 21 ஆம் தேதியிடப்பட்டதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். லோகநாதனல் தயாரிக்கப்பட்டதுமான, சொல்லப்பட்ட 2339 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க அதன் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் எல்லைகளாகப் பாதைகளைக் கொண்டுள்ளது ; அத்துடன் ஏழு ஏக்கர், இரண்டு றூட், பதின்மூன்று தசம் நான்கு மூன்று பேர்ச் (ஏ7 றூ2 பே13.43) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் சொல்லப்பட்ட 2339 ஆம் இலக்க வரைபடத்தில் கூறப்பட்ட வீதிகளைப் பயன்படுத்துவதற்கான உரிமையையும் கொண்டிருக்கின்றது.

2. மேற்கூறப்பட்ட பள்ளே பற்றுவில் தெகிவளை–கல்கிசை மாநகரசபை எல்லைக்குள் இரத்மலானை தெற்கில் அமைந்திருப்பதும் 1956 ஆம் ஆண்டு ஓகத்து 23 ஆம் தேதியிடப்பட்டதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் திரு. இராசேந்திராவினல் தயாரிக்கப்பட்டதுமான 955 ஆம் இலக்க வரைபடத்தில் இலக்கம் 12 ஐக் கொண்டது மான துண்டத்தின், வரையறுக்கப்பட்ட ஒரு பாகமாக அமைந்துள்ளதும், துண்டம் " ஆ " என்பது 1978 திசெம்பர் 21 ஆம் தேதியிடப்பட்டதும் உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். லோகநாதனல் தயாரிக்கப்பட்டதுமான சொல்லப்பட்ட 2339 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க எல்லைகளாக அதன் வடக்கில் கந்தவளை தோட்டத்தின் ஒரு பகுதியையும் முடிக்குரிய காணிகளையும், கிழக்கில் வீதியையும், துண்டம் " இ " வையும், தெற்கில் துண்டம் " ஈ " யையும் கந்தவளை தோட்டத்தின் ஒரு பகுதியையும், மேற்கில் வீதியையும் கந்தவளை தோட்டத்தின் ஒரு பகுதியையும் கொண்டுள்ளது ; அத்துடன் ஒன்பது ஏக்கர், ஒரு றூட், இருபத்துநான்கு பேர்ச் (ஏ9 றூ1 பே24) விஸ்தீரணம் கொண்டுள்ளதுடன் சொல்லப்பட்ட 2339 ஆம் இலக்க வரைபடத்திற் கூறப்பட்ட வீதிகளைப் பயன்படுத்துவதற்கான உரிமையையும் கொண்டிருக்கிறது.

3. மேற்கூறப்பட்ட பள்ளே பற்றுவில் தெகிவளை–கல்கிசை மாநகர சபை எல்லைக்குள் இரத்மலானை தெற்கில் அமைந்திருப்பதும் 1956 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் தேதியிடப்பட்டதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். இராசேந்திராவினல் தயாரிக்கப்பட்டதுமான சொல்லப்பட்ட 955 ஆம் இலக்க வரைபடத்தில் இலக்கம் 12 ஐக் கொண்டதுமான துண்டத்தின், வரையறுக்கப்பட்டதொரு பாகமாக அமைந்துள்ளதும், துண்டம் " இ " எனக் குறியிடப்பட்டதுமான எல்லாக் காணித் துண்டும் ; துண்டம் " இ " என்பது 1978 திசெம்பர் 21 ஆம் தேதியிடப்பட்டதும் உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். லோகநாதனல் தயாரிக்கப்பட்டதுமான சொல்லப்பட்ட 2339 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க எல்லைகளாக அதன் வடக்கில் துண்டம் " ஆ " வையும், கிழக்கில் வீதியையும், தெற்கில் துண்டம் " ஈ " வையும் மேற்கில் துண்டம் " ஆ " வையும் கொண்டுள்ளது. அத்துடன் அந்தச் சொல்லப்பட்ட துண்டம் " இ " மூன்று றூட், முப்பத்துமூன்று தசம் ஒன்று இரண்டு பேர்ச் (ஏ0 றூ3 பே33.12) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் சொல்லப்பட்ட 2339 ஆம் இலக்க வரைபடத்தில் கூறப்பட்ட வீதிகளைப் பயன்படுத்துவதற்கான உரிமையையும் கொண்டிருக்கிறது.

4. மேற்கூறப்பட்ட பள்ளே பற்றுவில் தெகிவளை–கல்கிசை மாநகரசபை எல்லைக்குள் இரத்மலானை தெற்கில் அமைந்திருப்பதும், 1956 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் தேதியிடப்பட்டதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். இராசேந்திராவினல் தயாரிக்கப்பட்டதுமான சொல்லப்பட்ட 955 ஆம் இலக்க வரைபடத்தில் இலக்கம் 12 ஐக் கொண்ட துண்டத்தின் வரையறுக்கப்பட்டதொரு பாகமாக அமைந்துள்ளதும் துண்டம் " ஈ " எனக் குறியிடப்பட்டதுமான எல்லாக் காணித் துண்டும், அதனகத்து நிலைத்துள்ள கட்டிடங்களும் ; அந்தச் சொல்லப்பட்ட துண்டம் " ஈ " என்பது 1978 திசெம்பர் 21 ஆம் தேதியிடப்பட்டதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். லோகநாதனல் தயாரிக்கப்பட்டதுமான சொல்லப்பட்ட 2339 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க எல்லைகளாக அதன் வடக்கில் துண்டங்கள் " ஆ ",

" இ ", " உ " என்பவற்றையும், கிழக்கில் " ஊ " என்னும் துண்டத்தையும் கந்தவளை தோட்டத்தின் ஒரு பகுதியையும், தெற்கில் வீதியையும், மேற்கில் " ஆ " என்னும் துண்டத்தையும் கொண்டுள்ளது ; அத்துடன் அந்தச் சொல்லப்பட்ட துண்டம் " ஈ " என்பது பதினேழு ஏக்கர், இரண்டு றூட், தசம் எட்டு ஒன்பது பேர்ச் (ஏ17 றூ2 பே00.89) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் சொல்லப்பட்ட 2339 ஆம் இலக்க வரைபடத்தில் கூறப்பட்ட வீதிகளைப் பயன்படுத்துவதற்கான உரிமையையும் கொண்டிருக்கின்றது.

5. மேற்கூறிய பள்ளே பற்றுவில், தெகிவளை–கல்கிசை மாநகரசபை எல்லைக்குள் இரத்மலானை தெற்கில் அமைந்திருப்பதும் 1956 ஆம் ஆண்டு ஒகத்து மாதம், 23 ஆம் தேதியிடப்பட்டதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். இராசேந்திராவினால் தயாரிக்கப்பட்டதுமான சொல்லப்பட்ட 955 ஆம் இலக்க வரைபடத்தின் இலக்கம் 12 ஐக் கொண்ட துண்டத்தின் வரையறுக்கப்பட்டதொரு பாகமாக அமைந்துள்ளதும், துண்டம் " உ " எனக் குறியிடப்பட்டதுமான எல்லாக் காணித் துண்டும், அந்தச் சொல்லப்பட்ட துண்டம் " உ " என்பது 1978 திசெம்பர் 21 ஆம் தேதியிடப்பட்டதும் உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். லோகநாதனால் தயாரிக்கப்பட்டதுமான சொல்லப்பட்ட 2339 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க எல்லைகளாக அதன் வடக்கில் விமானநிலைய வீதியையும் முடிக்குரிய காணியையும் கிழக்கில் வீதியையும், தெற்கில் துண்டங்கள் " ஈ ", " ஊ " என்பவற்றையும் மேற்கில் முடிக்குரிய காணியையும் வீதியையும் கொண்டுள்ளது; அத்துடன் அந்தச் சொல்லப்பட்ட துண்டம் " உ " என்பது எட்டு ஏக்கர், இரண்டு றூட், பதினேழு தசம் ஒன்று இரண்டு பேர்ச் (ஏ8 றூ2 பே17.12) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் சொல்லப்பட்ட 2339 ஆம் இலக்க வரைபடத்தில் கூறப்பட்ட வீதிகளைப் பயன்படுத்துவதற்கான உரிமையையும் கொண்டிருக்கின்றது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 60 (வெளிநாடு) ரூபா 80. இவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.